காணும் பொங்கலை முன்னிட்டு

# 17ம்தேதி மெரினாவிற்கு சிறப்பு வாகன சேவை

## மெட்ரோ ரயில்வே அதிகாரி தகவல்



சென்னை, ஜன. 12: காணும் பொங்கலை முன்னிட்டு வரும் 17ம் தேதி அரசினர் தோட்டம் மற்றும் டி.எம்.எஸ் நிலையங்களில் இருந்து மெரினாவிற்கு சிறப்பு வாகன சேவை இயக்கப்பட உள்ளதாக மெட்ரோ ரயில்வே அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

தமிழகத்தில் வரும் 15ம் தேதி பொங்கல் பண்டிகை கொண்டாடப்படுகிறது. இதை முன்னிட்டு பலரும் தங்களின் சொந்த ஊர்களுக்கு பயணப்பட்டு வருகின்றனர். சென்ட்ரல், எழும்பூர், விமானநிலையம், கிண்டி, கோயம்பேடு உள்ளிட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் கூட்டம் அதிகரித்தவாறு உள்ளது. மேலும், 17ம் தேதி காணும்பொங்கல் கொண்டாடப்படுகிறது. காணும் பொங்கலை முன்னிட்டு பொதுமக்கள் பூங்கா, கடற்கரை போன்ற இடங்களில் கூடுவார்கள்.

வழக்கமாக ஒவ்வொரு ஆண்டும் காணும் பொங்கலின்போது தங்கள் உறவினர்கள் மற்றும் குடும்பத்தினருடன் மெரினா கடற்கரையில் பொதுமக்கள் கூடுவார்கள். எனவே, அன்றைய தினம் பொதுமக்களின் வசதிக்காக அரசினர் தோட்டம் மற்றும் டி.எம்.எஸ் ஆகிய இரண்டு மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து மெரினா கடற்கரைக்கு செல்ல கூடுதல் ஷேர் ஆட்டோ மற்றும் கேப் சேவை செயல்பட உள்ளது. பொதுமக்களின் தேவைக்கேற்ப வாகனங்களை இயக்க மெட்ரோ ரயில்வே நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. காலை 6 மணி முதல் இரவு 11 மணி வரையில் இச்சேவை செயல்படும். இதேபோல், பொதுவிடுமுறையான 15, 16 மற்றும் 17ம் தேதிகளில் மெட்ரோ ரயில் கட்டணத்தில் 50 சதவீத தள்ளுபடி வழங்கப்படுகிறது.

மேலும், காணும்பொங்கல் அன்று மெட்ரோ ரயில் நிலையங்களில் ஏற்படும் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்தும் பணியில் ஊழியர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவ்வாறு கூறினார்.